சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

அனுப்புநர்

பா.இளங்கோ பிகாம் பி எல்
தேவஸ்தானமேலாளர்
99 அரண்மனை
சிவகங்கை 630561

பெறுநர்

ஆணையர்,
இந்துசமயஅறநிலையத்துறை,
சென்னை 34

வழி– இணைஆணையர்,
இந்துசமயஅறநிலையத்துறை,
சிவகங்கை

ந.க.எண் D4 1190/2021 நாள் 30.05.2022

ஐயா,

பொருள்– சிவகங்கைசமஸ்தானம்தேவஸ்தானம், திருவெற்றியூர் அருள்மிகு வல்மீகநாதசுவாமி சமேத பாகம்பிரியாள்அம்மன் திருக்கோவில் பலவகை வருவாய் – குத்தகை இனங்கள் 1432ம் பசலிக்கு 14.06.2022 ந்தேதி பொதுஏலம்/டெண்டர் நடத்துவது –சம்மந்தமாக

பார்வை– சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேதகு பரம்பரைஅறங்காவலர்/ ராணி சாஹிபா அவர்கள் தீர்மானம் எண் 4082 நாள் 27.05.2022

---

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் திருவெற்றியூர் அருள்மிகு வல்மீகநாதசுவாமி சமேத பாகம்பிரியாள்அம்மன் திருக்கோவிலில் கீழ்க்கண்ட பலவகை வருவாய்தரும் குத்தகை இனங்களை 1432ம் பசலிக்கு (01.07.2022 முதல் 30.06.2023 வரை ) மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமையினை 14.06.2022ந்தேதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து பொதுஏலம் /டெண்டர் நடத்த இந்துசமய அறநிலையத்துறை இணைஆணையர் அவர்களை கலந்து நாள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏல இனங்கள் | முன் மூன்று பசலிகளின் குத்தகைதொகை | | |
|---|---|---|---|---|
| | | பசலி 1429 | பசலி 1430 | பசலி 1431 |
| 1 | உபயகோழி சேவல் சேகரிக்கும்உரிமம் | 1820000 | 1154000 | 1800000 |
| 2 | முடிசேகரம் உரிமம் | 4007000 | 2556000 | 3960000 |

ஆகவே 14.06.2022 அன்று நடைபெறவிருக்கும் பொதுஏலம்/டெண்டரில் சிவகங்கை இந்துசமயஅறநிலையத்துறை இணைஆணையர் அவர்கள் கலந்துகொள்ளதக்க உத்தரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொதுஏலம்/ டெண்டர் நோட்டீசுகளில் ஒன்றினை இணைஆணையர் அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்திட பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஓம்/பா இளங்கோ
தேவஸ்தானமேலாளர்

இணைப்பு – /உ ந உ ப/

சிரஸ்தார்(பொ)

30/5/2022

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்
1432ம் பசலி பொதுஏலம்/டெண்டர் அறிவிப்பு

ந.க எண் D4 1190/2022 நாள் 30.05.2022

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், திருவெற்றியூர் அருள்மிகு பாகம்பிரியாள் சமேத ஸ்ரீவல்மீகநாதசுவாமி திருக்கோவிலுக்குப்பாத்தியமான கீழ்க்கண்ட குத்தகைஇனங்களை 01.07.2022 முதல் 30.6.2023 முடிய 1432ம் பசலிக்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமையினை 14.06.2022ந்தேதி முற்பகல் 12.00மணிக்கு பொதுஏலம் டெண்டர்/ திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து சிவகங்கை இந்துசமய அறநிலையத்துறை இணைஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

| வ.எண் | ஏல இனங்கள் | டிபாசிட் தொகை ரூ |
|---|---|---|
| 1 | முடிமயிர் சேகரம் உரிமம் | 20,00,000/– |
| 2 | உபயகோழி சேவல் சேகரிக்கும்உரிமம் | 10,00,000/– |

14.06.2022 தேதி முற்பகல் 12.00 மணிக்கு மூடிமுத்திரையிட்ட டெண்டர்கள் சிவகங்கை தேவஸ்தானம் மேலாளரால் திறக்கப்படும்.

பொதுஏலம்/டெண்டர் நிபந்தனைகள்

1. வரிசை எண் 1 மற்றும் 2 இனங்களுக்கு மட்டும் பொதுஏலம்.டெண்டர் கேட்க விருப்ப முள்ளவர்கள் மேற்கண்ட ஏல இனங்களுக்கு, டிபாசிட் தொகைக்கு மேலாளர், சிவகங்கை தேவஸ்தானம் என முகவரியிட்டு வங்கிகேட்பு வரைவோலை ( டி டி ) மூலம் செலுத்தி ( சிவகங்கையில் மாற்றத்தக்கவகையில் ) அதற்கான ரசீதை டெண்டருடன் இணைத்து கொடுக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. முன்பசலிகளின் குத்தகை பாக்கிதாரர்கள் டெண்டர்/பொதுஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக் கப்படமாட்டாது.
3. 14.06.2022 முற்பகல் 11.30 மணி வரை டெண்டர் பெற்றுக்கொள்ளப்படும். முற்பகல் 12.00 மணிக்கு வரிசை எண் 1 மற்றும் 2 இனங்களுக்கு சிவகங்கை இந்துசமய அறநிலையத்துறை இணைஆணையர் அவர்கள் முன்னிலையில் பொது ஏலம் டெண்டர்/ நடத்தப்படும்.
4. டெண்டர்தாரர்கள் டெண்டரில் குறிப்பிடும் தொகையினை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தம் இல்லாமல் எழுதி கையொப்பம் மற்றும் தேதியிடல்வேண்டும். முன்னதாக திருக்கோயில் அலுவலகத்தில் ரூ 100 செலுத்தி டெண்டர் பாரம் 30.05.2022 முதல் 14.06.2022 தேதிவரை முற்பகல் 11.00 மணி வரை சரகஅலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
5. ஏலத்தில் உயர்ந்த கேள்விக்குப்பின் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் டெண்டர்கள் திறக்கப்படும். பொதுஏலம்/டெண்டரில் உயர்ந்த கேள்வியாக கேட்கப்பட்ட கேள்வி தாரர்களுக்கு சென்னை இந்துசமயஅறநிலையத்துறை ஆணையர்அவர்களின் ரத்து அங்கீகாரத்திற்கு உட்பட்டு டெண்டர்/பொதுஏலம் குத்தகை உரிமை முடிவு செய்யப்படும்.
6. உயர்ந்தகேள்விதாரர் டெண்டர்/ஏலத்தொகை முழுவதையும் உடன் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.
7. உயர்ந்த கேள்விதாரர் 6ல் கண்ட நிபந்தனையின்படி ஏலத்தொகை செலுத்த தவறினால் மறுஏலம்/டெண்டர் நடத்தப்படும். அவ்விதம் நடத்தப்படும் மறுடெண்டர்/பொதுஏலம் குறைந்த தொகைக்கு சென்றால் டிபாசிட்தொகையை இழப்பதுடன் நிர்வாகத்திற்கு ஏற்படும் சகல நஷ்டத்திற்கும் முன்டெண்டர்தாரர் / ஏலதாரரிடம் வசூலிக்கப்படும். லாபம் ஏற்பட்டால் அதில் உரிமைகிடையாது.

8. டெண்டர்/பொதுஏலம் 1432ம் பசலிக்கு 01.07.2022 முதல் 30.6.2023 முடிய உள்ள காலத்திற்கு மட்டும்.
9. டெண்டர்/பொதுஏலத்தை எவ்வித காரணமும் தெரிவிக்காமல் ஒத்திவைக்கவோ, ரத்து செய்யவோ ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.
10. டெண்டர்/பொதுஏலம் சென்னை இந்துசமயஅறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ரத்து அதிகாரத்திற்குட்பட்டது.
11. டெண்டர்/பொதுஏலம் உறுதி செய்து உத்தரவு பெற்றவுடன் டெண்டர்தாரர்/பொது ஏலதாரர் தனது சொந்தச்செலவில் 10 தினங்களுக்குள் ரூ 50/– மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டும். தவறினால் டெண்டர்/பொதுஏலம் நடத்தி அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நிபந்தனை 7ல் கண்டபடி டெண்டர்தாரர்/ ஏலதாரர் பொறுப்பாக்கப்படும். டெண்டர்/ஏல நிபந்தனைகளை கூட்டவோ குறைக்கவோ மாற்றம் செய்யவோ டெண்டர்/ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.
12. பொதுஏலம்/டெண்டரில் கலந்து கொள்பவர்கள் ஏலம் நிபந்தனைகளை தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படும்.
13. உரிமம் குத்தகைகளை இந்துசமயத்தினர் மட்டுமே ஏல/டெண்டர் எடுக்க அனுமதிக்கப்படுவர்.
14. ஷ திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்தவேண்டியவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவர்கள் மற்றும் நடத்துபவர்கள் அவர்களின் உறவினர்கள் கோயிலின் நன்மைக்கு புறம்பாக செயல்படுபவர்கள் அல்லது மேலேகண்ட வகையினருக்காக பினாமியாக கேட்பவர் என திருக்கோயில் நிர்வாகிகளால் கருதப்படுபவர்கள், ,மற்றும் 21 வயது நிறைவுபெறாதவர்கள் ஏலம்/டெண்டர் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
15. ரூ 30,000/–க்கு மேல் குத்தகை எடுக்கும் குத்தகைதாரர்கள் 1% GST வருமான வரி செலுத்திடவேண்டும்.
16. பொதுஏலம்/டெண்டரில் கலந்துகொள்பவர்கள் ஆதார் கார்டு, பான் கார்டு நகல்கள் இணைக்கவேண்டும்.

<u>முடிசேகர உரிமை சிறப்பு நிபந்தனை</u>

1. முடிசேகரித்துக்கொள்ளும் உரிமை பெற்றவர்கள் திருக்கோயிலிலிருந்து முடி எடுக்க நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் எடுத்துக்கொள்ளும் முடியை அவ்வப்போது சேகரித்துக் கொள்ளவேண்டும்.
2. முடிசேகரத்தினை அவ்வப்போது சேகரித்துக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுமாயின் அதனால் ஏற்படும் சுகாதாரக்கேடுக்கு முடிசேகர உரிமை பெற்றவரே முழுப்பொறுப்பாகும்.
3. முடிசேகரம் செய்யும்போது பக்தர்களுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படக்கூடாது.
4. வருமானவரி 2.5 சதவீதம் விற்பனை வரி 5 சதவீதம் மற்றும் இதரவரிகள் ஏலம் உறுதி செய்யப்பட்டவர் உடன் செலுத்தப்படவேண்டும்.

ஓம்/பா இளங்கோ
தேவஸ்தானமேலாளர்

/உ ந உ ப/

சிரஸ்தார் (பொ)

30/5/2022

30/5/2022